
# தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்புத் துறை

# TNOCD



**விதைச்சான்று மற்றும் அங்கக சான்றளிப்பு இயக்ககம்**
**கோவை – 641 013.**

## தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்புத் துறை

தமிழ்நாட்டில் அங்கக சான்றளிப்பு மத்திய அரசின் தேசிய அங்கக வேளண்மை செயல்திட்டத்தின் படி அபீடா APEDA நிறுவனத்தின் வழிகாட்டுதல் மற்றும் அங்கிகரத்தின் அங்கீகார எண்:(NPOP/NAB/0019) மூலமும் செயல்படுத்தபட்டு வருகின்றது.

## சான்றளிப்பு திட்டங்கள்

1. அங்கக வேளாண்மையில் ஈடுபட்டுள்ளோர் இத்திட்டத்தின் படி அங்கக சான்று பெற தனி நபராகவோ, குழுவாகவோ பதிவு செய்து கொள்ளலாம் மேலும் கால்நடை பராமரிப்பு, தேனீ வளர்ப்பு, வனப்பெருட்கள் சேகரிப்பு செய்வோரும் இதில் பதிவு செய்து கொள்ளலாம்.
2. பெரு வணிக நிறுவனங்களும் பதிவு செய்து கொள்ளலாம்.
3. அங்கக விளைபொருள்களை பதன் செய்வோரும் வணிகம் மற்றும் ஏற்றுமதி செய்வோரும் பதிவு செய்யலாம்.

## கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள்

1. அங்கக முறைப்படி இயற்கை வழி வேளாண்மை முறையில் சாகுபடி மேற்கொள்ளபட வேண்டும்.
2. இரசாயன பூச்சிகொல்லி மருந்துகள், மரபணு மாற்றம் செய்யபட்ட விதைகள், இரசாயன நேர்த்தி செய்த விதைகள் எக்காரணம் கொண்டும் பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது.
3. அங்கக வேளாண்மை சாகுபடி செய்யும் பண்ணை தனிமைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இதனால் அருகிலுள்ள விவசாய நிலங்களினாலோ அல்லது இதர சூழ்நிலைகளின் மூலமாகவோ அங்ககப் பண்ணை மாசுபடுவது தடுக்கப்படுகிறது.
4. அங்கக சான்றளிப்பிற்க்கு மாறுதல் காலம் (Conversion Period) கடைப்பிடிக்க வேண்டும்.
    - ❖ இந்த கால அளவு சுற்றுச் சூழலையும் முந்தைய நிலப்பயன்பாட்டையும் பொறுத்து அமையும்.
    - ❖ சான்று செய்யப்பட உள்ள பயிர் விதைப்பதற்கு குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்து தேசிய அங்கக உற்பத்தி தரங்கள் அனைத்தும் பராமரிக்கப்பட்டிருக்க வேண்டும்.
    - ❖ பல்லாண்டு பயிர்களுக்கு (Perennial crops) முதல் அறுவடை தொடங்க குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு முன்பிருந்து தேசிய அங்கக தரங்கள் பராமரிக்கப்பட்டிருக்க வேண்டும்.
    - ❖ ஏற்கனவே அங்கக முறையில் தொடர்ந்து சாகுபடி செய்பவர்களாக இருந்தாலும் குறைந்தது 12 மாதங்கள் காத்திருக்கும் காலத்திற்கு பிறகு தான் சான்று வழங்க ஏதுவாகும், ஆனால் தொடர்ந்து அங்கக சாகுபடி செய்தமைக்கு உரிய பதிவு ஆவணங்கள் (Documents) காண்பிக்கப்பட வேண்டும்.
5. அங்கக வேளாண் சாகுபடியின் போது பயறுவகை பயிர்கள் சாகுபடி வருடாந்திர பயிர் சுழற்சியில் இருக்க வேண்டும். இதனால் மண்வளம் பாதுகாக்க வழிவகுக்கிறது.
6. இயற்கை உரம், தாவர பூச்சிக் கொல்லிகள் பண்ணைக்கு வெளியில் இருந்து வாங்கி உபயோகப்படுத்தப்படும் பட்சத்தில் அது இரசாயன உரம், பூச்சிக் கொல்லி மற்றும் வேறு மாசுபடுத்தும் பொருட்கள் இல்லாதது என்பதனை எழுத்து முலம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து பெற்ற பின்னரே பயன்படுத்த வேண்டும். நன்கு மக்கிய பின்னரே இயற்கை உரங்களை இட வேண்டும்.
7. அங்கக சான்றுக்கு விண்ணப்பிக்கும் பண்ணையில் பதிவு ஆவணங்கள் (Documentation) பராமரிக்க வேண்டும். பண்ணைக்கு உள்ளே வரும் இடுபொருட்கள், பண்ணையில் இருந்து வெளியில் செல்லும் பொருட்கள் பற்றியும், தினசரி பணிகள், ஆண்டு பயிர்திட்டம், பரிசோதணைகள் பற்றிய விபரங்களையும் பதிவு செய்து ஆவணங்கள் (Documentation) பராமரிக்கப்பட வேண்டும். அவைகள் ஆய்வின்போது காண்பிக்கப்பட வேண்டும்.
8. மண் அரிமானத்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.
9. தொழிற்சாலை கழிவு நீர் ஓடைகள், அதிக உரம், பூச்சி மருந்து பயன்படுத்தும் பண்ணைகள் அருகில் அங்கக சான்றுப் பண்ணைகளில் இருக்க கூடாது.
10. கால்நடைகள் பண்ணையிலேயே பராமரிக்கப்பட வேண்டும். கால்நடைகளுக்கு தீவனமாக தினமும் கூடிய வரையில் பண்ணையில் விளைந்தவற்றினையே பயன்படுத்த வேண்டும் வெளியில் இருந்து தீவனம் பெறப்படின் மாசு இல்லாத இடங்களில் விளைந்ததாக இருத்தல் வேண்டும்.
11. அங்கக வேளாண்மைக்கு பயன்படுத்தும் பண்ணைக் கருவிகள், இயந்திரங்கள், வாகனங்கள், டிராக்டர், லாரி

இவைகளின் முலம் அங்கக விளைப்பொருட்கள் மாசுபடாதவாறு அவ்வப்போது சுத்தப்படுத்தி பராமரிக்க வேண்டும். அங்கக விளைபொருட்கள் சேமிக்கும் இடங்கள் தனியாகவும் சுத்தமாகவும் பராமரிக்கப்பட வேண்டும்.

12. அங்கக பொருட்கள் அனுப்பும் கொள்கலன்கள் எளிதில் மட்கும் (Bio degradable material) பொருட்களால் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.
13. அங்கக பொருட்களின் கொள்கலனில் பொருட்களின் முழுவிபரங்கள் குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.
14. அங்கக விவசாயம் மற்றும் இரசாயன முறை விவசாயம் ஆகிய இரண்டு முறைகளிலும் விளைபொருட்கள் உற்பத்தி செய்யப்படும் பட்சத்தில் இரண்டையும் தனியாக பிரித்து கலப்பு ஏற்படாதபடி முறையாக கையாளவேண்டும்.

## அங்கக சான்றளிப்பிற்கு விண்ணப்பிக்க

### தேவையானவை

1. விண்ணப்ப படிவம்
2. பண்ணையின் பொது விபர குறிப்பு
3. பண்ணையின் வரைபடம்
4. மண் மற்றும் பாசன நீர் பரிசோதனை விபரம்
5. ஆண்டு பயிர் திட்டம்
6. துறையுடனான ஒப்பந்தம்
7. நில ஆவணம் (சிட்டா நகல்)
8. நிரந்தர கணக்கு எண் (PAN Card Xerox Copy)

ஆகிய விபரங்களுடன் 3 நகல்களில் உரிய விண்ணப்பத்துடன் உரிய கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்கலாம், பதிவு மற்றும் புதுப்பித்தல் கட்டணங்களுக்கான வங்கிவரைவு கீழ்காணும் பெயருக்கு எடுக்கப்படல் வேண்டும்.

**"Director of Organic Certification"**

**payable at Coimbatore**

அங்கக விளைபொருள் உற்பத்தி அங்கக விளைபொருள் பதனிடுவோர் (Organic Processor) மற்றும் அங்கக விளைபொருட்கள் விற்பனை செய்வோருக்கு (Organic Trader) அபீடா நிறுவனத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் சான்று வழங்கப்பட்டு வருகின்றது.

## சான்று கட்டண விபரம்

| வ. எண் | விபரம் | பதிவு கட்டணம் ரூ | ஆய்வு மற்றும் சான்று கட்டணம் ரூ | பயணநேர கட்டணம் ரூ | வாய்ப்புச் சான்று கட்டணம் ரூ | மொத்தம் ரூ |
|---|---|---|---|---|---|---|
| 1 | தனிநபர் சிறு, குறு விவசாயிகள் | 500 | 1000 | 250 | 1000 | 2700 /- |
| 2 | தனிநபர் பிற விவசாயிகள் | 1000 | 1000 | 250 | 1000 | 3200 /- |
| 3 | குழுப் பதிவு | 5000 | 1000 | 250 | 1000 | 7200 /- |
| 4 | வணிக நிறுவனம் | 5000 | 2000 | 400 | 1000 | 8400 /- |

புதுப்பித்தல் கட்டணம் : 25% பதிவுக் கட்டணம் + ஆய்வுக்கட்டணம் (ஆண்டு தோறும்) முழுவதும் + பயணநேர கட்டணம் முழுவதும்

## Our Working Area




மேலும் விபரங்களுக்கு கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொண்டு பயன்பெறவும்.


விதைச்சான்று மற்றும் அங்கக சான்றளிப்பு இயக்குநர்
1424 ஏ, தடாகம் சாலை
ஜி.சி.டி. போஸ்ட்
கோவை - 641013
தொலைபேசி : 0422 - 2435080
பேக்ஸ் : 0422- 2457554
மின் அஞ்சல் : tnocdcbe@gmail.com
www.tnocd.net



Printed at : Sri Sakthi Promotional Litho Process